


11. 02. 2026

## தலைப்புச் செய்திகள்

- 2026-27ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் எதிர்காலத்தை திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- உள்நாட்டு சூரிய சக்தி மின் உற்பத்தி திறன் 144 ஜிகாவாட்டை எட்டியுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ், திமுக கூட்டணி தொடரும் என்று முதலமைச்சர் திரு. மு. க . ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் பசுமை தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக தமிழக அரசு உரிய பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
- சென்னையில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு பூனாச்சா, தாய்லாந்தின் Pruchya இணை முன்னேறியுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

2026-27-ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் எதிர்காலத்தை திட்டமிட்டு வடிவமைக்கப் பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

குவஹாட்டியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிராமங்கள், ஏழை எளியோர் விவசாயிகள், இளைஞர்கள், மகளிரை இலக்காக கொண்டு நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

அடித்தட்டு மக்களை தற்சார்பு உடையவர்களாக மேம்படுத்த இதில் பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு இந்த பட்ஜெட்டில் வகை செய்யப் பட்டுள்ளதாக கூறினார்.

ஊரக மேம்பாட்டு அமைச்சகத்திற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு 21 சதவிகிதமாக அதிகரிக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

உள்நாட்டு சூரிய சக்தி மின் உற்பத்தி திறன் 144 ஜிகாவாட்டை எட்டியுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், கடந்த 11 ஆண்டுகால தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் ஒருலட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமான நிதி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் முதல்கட்ட பசுமை எரிசக்தி வழித்தட திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டதாகவும்,

இரண்டாம் கட்ட பணிகளுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

முரளீதர் மோஹல்

நாட்டின் பால் உற்பத்தியை நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் கிலோ கிராமாக அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக மத்திய கூட்டுறவு துறை இணையமைச்சர் திரு. முரளீதர் மோஹல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், இதனால் அடுத்த 5 ஆண்டுகளில் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து

கூடுதலாக 50 சதவிகிதம் பால் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இன்னும் 2 ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 7 லட்சம் கிலோவாக பால் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

அருண் பாரதி

2026-27ம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் பட்ஜெட் தேசிய வளர்ச்சிக்கான நிதி நிலை அறிக்கை என்று லோக் ஜன்சக்தியின் திரு. அருண் பாரதி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் இன்று உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை இலக்காக கொண்டு அதற்கான அடித்தளமாக அனைத்தையும் உள்ளடக்கிய பட்ஜெட் இது என்று குறிப்பிட்டார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வலு சேர்த்திருப்பதோடு உற்பத்தியை பெருக்க பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

பட்ஜெட்டின் மீது உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, தரவுகள், உணவு விநியோகம், எரிசக்தி முறைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நிலைத்தன்மையிலிருந்து நிலையில்லா தன்மை கொண்ட உலகத்தை நோக்கி நாம் பயணிப்பதாக எடுத்துரைத்தார்.

சிக்கிம் கிராந்திகார மோர்ச்சா கட்சியின் இந்திரசுபா பேசுகையில் தற்சார்பு இந்தியாவிற்கான பட்ஜெட் இது என்று பாராட்டினார்.

முன்னதாக எதிர்கட்சிகளின் பலத்த அமளியினூடே கேள்வி நேரம் இன்று மக்களவையில் தொடங்கியது.

எதிர்கட்சிகளின் கூச்சல் குழப்பங்களை பொருட்படுத்தாமல் அவை நடத்தும் அலுவலர் கேள்வி நேரத்தை நடத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜிஜு

தேச பாதுகாப்பு பிரச்சனைகளை அரசியல் கருவியாக மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல்காந்தி பயன்படுத்துவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது என்பதால் அரசியல் காரணங்களுக்காக அது சார்ந்த பிரச்சனைகளை எழுப்புவது தவிர்க்கப்பட வேண்டுமென்றார்.

தேச நலன் சாா்ந்த பிரச்சனைகளை கையாள மக்களவையில் சில விதிகளும், சில நடைமுறைகளும் உள்ளதாக அவர் குறிப்பிட்டாா்.

இவ்விஷயத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களின் நடவடிக்கை அவையின் மாண்பை குறைத்துள்ளதாக கூறினாா்.

அவை விதிகள் ஒழுங்குமுறைகளுக்கு உட்படாமல் இருப்பது மிகவும் ஆபத்தானது என்றும் கூறினாா்.

எதிா்கட்சித் தலைவராக அவையின் மாண்பையும் மதிப்பையும் நிலைநாட்டுவது திரு. ராகுல்காந்தியின் கடமை என்று
திரு. கிரண்ரிஜிஜு குறிப்பிட்டாா்.

❖❖❖❖❖❖❖❖❖

தீன்தயாள் உபாத்யாயா

பாரதிய ஜன சங் நிறுவனர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் 58-வது நினைவுதினத்தை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோா் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் தேச கட்டமைப்பிற்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்த தீன் தயாள் அடித்தட்டு மக்களின் மேம்பாட்டிற்காக அளப்பறிய சேவையாற்றியவர் என்று குறிப்பிட்டுள்ளாா்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில் அவரது கொள்கைகளும், சிந்தனைகளும் நாட்டின் எதிா்கால தலைமுறையினருக்கு வழிகாட்டும் ஒளியாக திகழும் என்றாா்.

பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. நிதின்நபின் தேசிய சேவைமயின் சின்னமாக திகழ்ந்தவர் என்று கூறியுள்ளாா்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக அரசு மக்கள் நலன் கருதி பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்துவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தொிவித்துள்ளாா்.

சென்னையில் இன்று தனியாா் ஊடக நேர்முகத்தில் பதிலளித்த முதலமைச்சர், வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக பெரும்பான்மை இடங்களில் வெற்றிபெறும் என்றாா்.

காங்கிரஸ், திமுக கூட்டணி வரும் சட்டப்பேரவை தேர்தலில் தொடரும் என்றாா்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

தொழிற்சாலைகள் தொடர்பு சட்ட விதிகள் மசோதா 2026 மக்களவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பூஜ்ஜிய நேரத்தின் போது இந்த மசோதாவை கொண்டுவந்தார்

❖❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17-ம் தேதி வெளியிடப்படவுள்ள நிலையில், துணை தேர்தல் ஆணையர் குழு இன்று சென்னை வந்தடைந்தது.

தேர்தல் ஆணையர் குழுவினை மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் வரவேற்றார்.

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை இக்குழுவினர் விரிவாக ஆய்வு செய்கின்றனர்.

அதனடைடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான பல்வேறு அம்சங்களை இக்குழுவினர் பரிந்துரைப்பார்கள் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

ஸ்டெர்லைட் ஆலை

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் பசுமை தாமிர உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி மறுத்த உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மனுவிற்கு தமிழக அரசும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியமும் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் விசாரணை வரும் 26-ம் தேதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

வேலூர் வாய்ஸ்

வேலூர் மாவட்டம் காட்பாடியில் அக்னி வீர் பெண்களை ராணுவத்தில் தேர்ந்தெடுப்பதற்கான ஆள்தேர்வு இன்று தொடங்கியது.

இதனை தொடங்கி வைத்து பேசிய ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

வேலைவாய்ப்பு முகாம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியாா் வேலைவாய்ப்பு முகாம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

இதேபோல் திருச்சி, அாியலூா் உள்ளிட்ட மாவட்டங்களிலும் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையம் மூலம் நடத்தப்படும் இம்முகாம்களில் தகுதியுடையவர்கள் பங்கேற்று பயன்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

உதகை

உதகை ரோஜா பூங்காவில் மே மாதம் நடைபெறவுள்ள 21-வது ரோஜா கண்காட்சிக்காக 32 ஆயிரம் ரோஜா செடி கவாத்து பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி. லஷ்மி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கி வைத்தாா்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

..வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவாி

தென்காசி மாவட்டத்தில் 3-வது பொருநை இலக்கிய திருவிழா நாளை முதல் 2 நாட்களுக்கு நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. கமல் கிஷோா் தொிவித்துள்ளாா்.

இத்திருவிழாவில் பழந்தமிழ் இலக்கியம் சொற்பொழிவுகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

திருச்சியில் மாவட்ட நிா்வாகம் சாா்பில் புத்தகத் திருவிழா வரும் 14-ம் தேதிமுதல் 22-ம் தேதிவரை நடைபெறுகிறது.

160 அரங்குகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளிட்ட 4 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு தகுதியுடையோா் வரும் 16-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் கூறியுள்ளாா்.

சிவகங்கை மாவட்டத்தில் தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு

வழங்கப்படவுள்ள திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் சேர விரும்புவோா் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சித் தலைவர் திருமதி. பொற்கொடி தொிவித்துள்ளாா்.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

சென்னையில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் கலியாண்ட பூனாச்சா, தாய்லாந்தின் Pruchya Isaro இணை முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை சாய்கா◌ா◌்த்திக், Digvijaypratap Singh இணையை 6-4, 6-2 என்ற செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖